[1972 மார்ச் 20

(*a*) whether there was any misappropriation in the Tapioca Package Scheme case in Killiyoor about 1969-70; and

(*b*) the stage at which the matter stands now?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் . எவ்வளவு ரூபாய்க்குக் கையாடல் நடந்திருக்கிறது? மூன்று ஆண்டு காலமாகியும் இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேயே இருப்பதற்குக் காரணம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள செலவினங்களில் கையாடல் நடந்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: இந்தக் கையாடல் வழக்கில் சம்பந்தப்படாத ஒரு சிலரும் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதிலே சம்பந்தம் இல்லாதவர்களையும் ஸ்டேட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சம்பந்தம் இல்லாதவர்களா இல்லையா என்பதைப் பற்றி நீதிபதி தீர்ப்புக்கூறவேண்டுமே தவிர, சம்பந்தம் உண்டு, இல்லை என்று நாம் இப்போது சொல்லுவதற்கில்லை.

டிராக்டர்கள் விற்பனை.

* 291 வினு—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து தமிழ்நாடு விவசாய முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் வரவழைத்து கொடுக்கும் வெளிநாட்டு டிராக்டர்களை வாங்குபவர்கள் அதிக லாபத்திற்கு வெளி மாநிலத்திற்கு விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இம்மாதிரியான தவறுகள் செய்பவர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யு மாறு தமிழ்நாடு வேளாண்மை-தொழில் கழகம் கேட்டுக்கொண்ட தன் விளைவாகவும், உள் நாட்டு/வெளிநாட்டு உழுவைகளைத் தேவை யான குடியானவர்களுக்கு நியாயமான முறையில் சமமாகப் பகிர்ந் தளிக்கும் நோக்குடனும் "உழுவை (வழங்குதல் மற்றும் விற்பனை) கட்டுப்பாட்டு ஆணை" ஒன்றினை மைய அரசு சமீபத்தில் பிறப்பித் துள்ளனர். இவ்வாணையின் கீழ் எந்த ஒரு நபரும் தான் வாங்கிய உழுவையை அவர் வாங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டு களுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியின் "எழுதிய முன் அனுமதி யின்றி" விற்கக்கூடாது. இச்சட்டத்தை மீறுபவருடைய உழுவை பறிமுதல் செய்யப்படுவதோடு அவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் மேற்படி ஆணையில் வகை செய்யப்பட்டுள்ளது.

Agricultural Information Workshop

*292 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Agricultural Information Workshop was conducted by the Agriculture Department on or about 26th April 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) சென்னையில் விவசாய செய்தி விளம்பர ஆய்வுக் கூட்டம் 25—4—1970 முதல் 27—4—1970 வரை நடைபெற்றது.

திருப்பூர் மின் நிலையம்.

* 589 வினு...திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மின்சார நிலையத்தை 110 K.V. சக்தி கொண்ட மின்சார நிலையமாக மாற்றும் வேலை எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அடுத்த ஆண்டுக்குள் இவ் வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.